# GST ROAD NEWS

Email:gstroadnews@gmail.com **CHROMPET** Weekly News Paper www.gstroadnews.com

Chrompet, Radha Nagar, Hasthinapuram, New Colony, Nehru Nagar

Vol:13 Issue - 35 | 14 Dec 2025 - 20 Dec 2025 | 4 Pages - Free Circulation Ct: 99628 80902


## புதிய உச்சத்தைத் தொட்ட முட்டை கொள் முதல் விலை

நாமக்கல்லில் முட்டை கொள்முதல் விலை இன்று 5 காசுகள் உயர்ந்து ரூ.6.20 என்ற புதிய உச்சத்தை எட்டியுள்ளது.55 ஆண்டுகால பண்ணை வரலாற்றில் இதுவே அதிகபட்ச கொள்முதல் விலை. டிச.14 அமலுக்கு வருகிறது.

## மெஸ்ஸியை காணாத விரக்தி ரசிகர்கள் வன்முறை

கொல்கத்தா சால்ட் லேக் மைதானத்தில் மெஸ்ஸியை காண முடியாத விரக்தியில் ரசிகர்கள் வன்முறை நாற் காலிகள் உடைப்பு, தீ வைப்பு அதிகாரிகள் மற்றும் பிரபலங் கள் சூழ்ந்ததால் ரசிகர்களுக்கு மெஸ்ஸியை காண வாய்ப்பு தராததால் ரசிகர்கள் ஆத்திரம் நிலைமை கைமீறியதால் காவல்துறையினர் தடியடி கூட்டத்தை கலைத்தனர். நிர்வாகத் தவறுக்கு மன்னிப்பு கேட்ட முதலமைச்சர் மம்தா பானர்ஜி,


3 BHK INDEPENDENT DUPLEX HOUSE
FOR SALE@ CHROMPET READY TO MOVE
Nr. Thirumalai Nagar, Zion School
3 BHK
LAND AREA 1050 Sqft
BULD AREA 1840 Sqft
As per Vasthu, CCP, Loan Arranged
99622 46773





FLATS FOR SALE
@ CHROMPET NEW COLONY
3BHK -1709 Sqft READY FOR OCCUPATION
AMENITIES:
COVERED CAR PARKING
LIFT, VAASTHU
LUXURY FINISH
ASV LIFE SPACES
98842 80255





FLATS FOR SALE
@ CHROMPET
THIRUMALAI NAGAR
NISHAN APARTMENT
5th STREET
NR. ZION SCHOOL
3 BHK
1200 Sqft
2ND FLOOR
NORTH FACING
LIFT/CCP/CCTV/ VIDEO DOOR PHONE
AS PER VAASTHU / 24 HRS WATER
NISHAN CONSTRUCTION 98409 84126






PREMIUM FLATS
FOR SALE @ CHROMPET
THIRUMALAI NAGAR, Nr.Zion School
READY TO MOVE
3 BHK-1240 Sqft
2 BHK-980 Sqft
☑ Lift ☑ CCP ☑ CCTV ☑ As Per Vasthu
Natarajan Apartment
GJ CONSTRUCTION
98409 41585





INDIVIDUAL DUPLEX HOUSE FOR SALE
@ CHROMPET MC NAGAR, HASTHINAPURAM
NR.SAI BABA TEMPLE
3 BHK
LAND 1275 Sqft
Built up area 2050 Sqft
2 Car Parking, Balcony
North facing
SRI RAGAVA BUILDERS | 63801 02672


3 BHK INDEPENDENT DUPLEX HOUSE FOR SALE
@ CHROMPET
3 BHK
AS PER VASTHU, CCP, LOAN ARRANGED
SITE ADDRESS :
HASTHINAPURAM, SARASWATHI NAGAR
NR. THIRUMALAI NAGAR, ZION SCHOOL
MANICKAM CONSTRUCTION
OFF.ADDRESS: PLOT NO.37, 7TH MAIN ROAD, VINOBAJI NAGAR, HASTHINAPURAM, CHENNAI - 64.
94442 14382
94442 55004





Shanthi Homes
READY TO OCCUPY
2 BHK - 1007, 3 BHK - 1388 sqft
PREMIUM FLAT FOR SALE
@ EAST TAMBARAM , NR VELAMMAL VIDYALAYA SCHOOL
★Automatic Lift ★CCTV
★As Per Vaasthu ★Car Parking
2 UNITS ONLY AVAILABLE
Best Price
Near by
GST Road
Velachery Main Road
Santorium Railway Station
Tambaram Railway Station
Mepz
School
Hospitals
FOR BOOKINGS
96001 33293





FLATS FOR SALE
CHROMEPET
HASTHINAPURAM
AGS COLONY
Nr Hasthinapuram Bus Stand
2 BHK-780 Sqft (Each Floors)
READY TO MOVE
Rs. 57 LAKHS ONLY
ALL INCLUSIVE
✓ 100% Vasthu ✓ Lift ✓ CCP ✓ CCTV
✓ Loan Arranged ✓ No Water Logging
✓ Modular Kitchen - Full interior
✓ Hall False Ceiling
ONLY ONE FLAT is AVAILABLE
NANDHA FOUNDATIONS PVT LTD
98401 07534 / 98412 17499





PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET

PADMANABHA NAGAR
Nr. KARUMARI AMMAN TEMPLE
NEW Projects
24 HRS POWER BACKUP*
4 BHK - 1825 Sqft
2 BHK - 941 & 898 Sqft

BALAJI NAGAR
Nr. PURUSHOTHAMAN NGR PERUMAL TEMPLE
NEW Projects
24 HRS POWER BACKUP*
4 BHK - 1710 Sqft
2 BHK - 867 & 843 Sqft

BASHYAM NAGAR
Nr. ABIRAMI KALYANA MANDABAM
NEW Projects
24 HRS POWER BACKUP*
3 BHK - 1132 Sqft
2 BHK - 1028 Sqft

Specification
With Lift
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Ev Charger Point
AUTOMATIC WATER TANK LEVELLER
Red Bricks Construction

Sankar Constructions
98416 59929 / 98416 59930
Project Approved by: LIC HFL LIC HOUSING FINANCE LTD | HDFC BANK | SBI








# மார்கழி மாதத்திற்கு என்ன மகிமை...



தமிழ் மாதங்களில் மார்கழி மாதம் ஒன்பதாவது மாதமாகும். இந்த மாதம் முழுவதும் இறைவனுக்கு உகந்ததாகவே போற்றப்படுகிறது. ஒரு ஆண்டில் பதினோரு மாதங்கள் கோயில்களுக்கு போக முடியாதவர்கள் மார்கழி மாதம் மட்டும் கோயிலுக்கு சென்றாலே வருடம் முழுதும் கோயிலுக்கு சென்ற பலன்கள் கிடைத்து விடும் என்பது ஐதீகம். எல்லா கஷ்டங்களும் நீங்கி, தை மாதத்திலிருந்து இருந்து புது வாழ்வு கிடைக்க இம்மாதத்தில் பிராத்தனை செய்யப்படுகிறது. ஸ்ரீகிருஷ்ண பகவான் மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்று பகவத் கீதையில் அருளியுள்ளார். மார்கழி மாதம் முழுவதும் இறைவனை வழிபடுவதால், இம்மாதத்தில் எவ்வித குடும்ப மங்கள விழாக்கள் நடத்தப் படுவதில்லை. இந்த மாதத்தில் அதிகாலை நீராடி ஆலய தரிசனம் செய்வது மிகவும் சிறப்பாகும்.

**மார்கழி மாதத்தில் நடந்த புராண சிறப்புகள்:**

மார்கழி மாதத்தில் மகாபாரத யுத்தம் நடைபெற்றதாக இதிகாசம் கூறுகிறது. மற்றும் ஆண்டாள் திருமாலை திருமணம் புரிந்ததும், திருப்பாற்கடல் கடையும் போது கிடைத்த விஷத்தை சிவன் உண்டு உலகை காப்பாற்றியதும், இந்திரனால் பெரு மழை உருவானபோது கோகுலத்தில் உள்ள அனைவரையும் காப்பாற்ற கோவர்த்தனகிரி மலையை, கிருஷ்ணர் குடையாகப் பிடித்து காப்பாற்றியதும் இந்த மார்கழி மாதத்தில்தான். மார்கழி மாத மிருகசீரிட நட்சத்திரத்தில் பிறந்த மார்க்கண்டேயர் மரணத்தை வென்றதாக மார்க்கண்டேய புராணம் குறிப்பிடுகிறது.

**திருப்பாவை, திருவெம்பாவை:**

ஆண்டாள் நாச்சியார் "மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்" என்றும், மாணிக்கவாசக நாயனார் திருவெம்பாவையில், "போற்றியாம் மார்கழி நீர் ஆடேலோர் எம்பாவாய்" என்றும் அதிகாலை வழிபாடு மகத்துவம் பற்றி பாடியுள்ளார்கள். மார்கழி மாதம் முழுவதும் பெரும்பான்மையான கோயில்களில் திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, ஆழ்வார் பாசுரங்கள் பாடப்படுகின்றன.


**மார்கழி மாத கோலம்:**

மார்கழி மாதத்தில் வாசலில் மிகப்பெரிய கோலம் போட்டு, அதில் வண்ண பொடி தூவுவதும், பூசணிப் பூவினை பசுஞ்சாணத்தில் வைப்பது இன்றும் சம்பிரதாயமாக பின்பற்றப் படுகின்றது. அந்த காலத்தில் தங்கள் வீட்டில் திருமண வயதுடைய பெண் இருக்கிறாள் என்பதைத் தெரிவிக்கும் அடையாளமாகவே கோலத்தின் மீது பூசணி பூவைப்பார்கள். அதிகாலையில் வீதியில் பஜனைக்கு வருபவர்கள், அந்த வழியாக செல்பவர்கள் அதனை புரிந்து கொண்டு, மார்கழி முடிந்ததும், தை மாதம் திருமணம் பேசி மணம் முடித்து விடுவார்கள். "மார்கழியில் பூசணிப் பூ வைக்க, தை மாதத்தில் திருமணம் கைகூடிவரும் என்பர்". மார்கழி மாதங்களில் வீட்டு முன்பு கோலமிட்டால் மகாலட்சுமி வீடு தேடி வருவார் என்பது நம்பிக்கை.

**மார்கழி மாத விழாக்களும், சிறப்புகளும்:**

மார்கழி மாதத்தில் அதிகாலையிலேயே ஆலய வழிபாடு தொடங்கிவிடும். இம்மாதத்தில் திருவாதிரை, வைகுண்ட ஏகாதசி, அனுமந் ஜெயந்தி, பாவை நோன்பு, திருவெம்பாவை நோன்பு, படி உற்சவம், விநாயகர் சஷ்டி விரதம், உற்பத்தி ஏகாதசி போன்ற விழாக்கள், பண்டிகைகள், விரதங்கள் கடைபிடிக்கபடுகின்றன. வைணவக்கோயில்கள் சிலவற்றில் மார்கழியில் ராப்பத்து, பகல் பத்து என்ற முறையில் நாலாயிர திவ்ய பிரபந்தம் முழுவதையும் பாராயணம் செய்கின்றனர். இம்மாதத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களில் வாயில நாயனார், சடைய நாயனார், இயற்பகை நாயனார், மானக்கஞ்சாற நாயனார், சாக்கிய நாயனார் ஆகியோரின் குருபூஜை நடத்தப்படுகிறது. பன்னிரு ஆழ்வார்களில் தொண்டரடிப் பொடியாழ்வார் ஜெயந்தி இம்மாதத்தில் கொண்டாடப் படுகிறது. இதைத்தவிர கிருத்துவர்களின் கிறிஸ்துமஸ், புதுவருட பிறப்பு, முகமதியர்களின் பக்ரீத் போன்ற பண்டிகைகள் இம்மாதத்தில் கொண்டாடப்படுகின்றன. புத்த, சீக்கிய மற்றும் சமண மதங்களிலும் இந்த மாதம் புனித மாதமாக கருதப்படுகிறது.

# சகல வினைகளையும் போக்கும் பிரதோஷ வழிபாட்டின் பலன்கள்...



ஒவ்வொரு மாதமும் வளர்பிறை மற்றும் தேய்பிறை திரயோதசி தினங்களில் மாலை 4.30 முதல் ஆறு மணி வரை உள்ள காலம் பிரதோஷ காலம் எனப்படுகிறது. அன்று தான் ஈசன் ஆலகாலவிஷத்தை உண்டு அகிலத்தை காத்ததாக புராணங்கள் கூறுகின்றன. பிரதோஷ காலம் என்பது மாலை 4 மணியில் இருந்து 6.30 வரை என சொல்கிறார்கள். இந்த நேரத்தில் சிவாலயம் சென்று வலம் வந்து ஈசனைத் தரிசிக்க வேண்டும். வசதி உள்ளவர்கள் இறைவனுக்கும் நந்திக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்தால் நல்லது. பிரதோஷ தரிசனம் காணும் வரை உணவு தவிர்த்து முழு விரதம் இருக்க வேண்டும். சனி மகாபிரதோஷ நாளில் இருக்கும் விரதம் ஆயிரம் சாதாரண தினப்பிர தோஷப் பலனைத் தரும் என்பது ஆன்மிக நம்பிக்கை. பிரதோஷ வேளையில் நந்தி பெருமானுக்கு அருகம்புல் அல்லது வில்வ மாலை சார்த்தி நெய் விளக்கு ஏற்றி பச்சரிசி வெல் லம் வைத்து பூஜை செய்யலாம். பிரதோஷ நேரத்தில் மட்டும் சிவபெருமானை வலம் வரும் விதத்தை சோம சூக்தப் பிரதட்சணம் என்பர். சோமசூக்தம் என்றால் அபிஷேக நீர் விழும் கோமுகி தீர்த்தத் தொட்டியை குறிக்கிறது. இந்தத் தொட்டியை மையமாக வைத்து வலம் இடமான இட வலமாக மேற்கொள்ளப் பெறும் பிரதட்சண முறையே பிரதோஷப் பிரதட்சணம் எனப்படுகிறது. நித்தியப் பிர தோஷம், பட்சப் பிரதோஷம், பிரளயப் பிர தோஷம் என இருபது வகை பிரதோஷங்கள் உள்ளதாக புராணங்கள் கூறுகின்றன. பிரதோஷ நேரத்தில் எல்லா தேவர்களும் ஈசனின் நாட்டியத்தை காண ஆலயம் வருவார்கள் என்பது நம்பிக்கை. எனவே, ஆலயத்தில் உள்ள மற்ற சந்நிதிகள் திரையிடப் பட்டு இருக்கும். பிரதோஷ நேரத்தில் மற்ற ஆலயங் களுக்குச் செல்லக் கூடாது என்பதும் ஒருஜதீகம். பிர தோஷ காலத்தில் நந்திபெருமானின் கொம்புகளுக் கிடையே சிவன் ஆடும் நேரம் என்பதால், அன்று நந்தியின் கொம்புகளுக்கிடையே சிவனை தரிசிப்பது சிறப்பு பலன்கள் தரும்.

# மார்கழி சிவராத்திரி

மார்கழி மாத சிவராத்திரி (தேய்பிறை சிவராத்திரி) டிசம்பர் 17, 2025 புதன்கிழமை நள்ளிரவு தொடங்கி டிசம்பர் 18, 2025 வியாழக்கிழமை நள்ளிரவு வரை கொண்டாடப்படுகிறது, இது சிவபெருமானின் மகிமையை போற்றும் ஒரு முக்கியமான நாள். இந்த நாட்களில் பக்தர்கள் விரதமிருந்து சிவபெருமானை வழிபடுவார்கள், மேலும் மார்கழி மாத உற்சவங்கள், திருவெம்பாவை பாராயணம் போன்றவையும் இந்த நேரத்தில் நடைபெறும்.

**முக்கிய நாட்கள்:**மார்கழி தேய்பிறை சிவராத்திரி: டிசம்பர் 17, 2025 (புதன்கிழமை) நள்ளிரவு முதல் டிசம்பர் 18, 2025 (வியாழக்கிழமை) நள்ளிரவு வரை நீடிக்கும்.

**ஆருத்ரா தரிசனம்:** மார்கழி மாத திருவாதிரை, ஜனவரி 13, 2025 அன்று வருகிறது, இதுவும் மார்கழி மாதத்தின் முக்கிய நாள்.

**வழிபாட்டு முறைகள்:**சிவராத்திரி அன்று மக்கள் சிவபெருமானையும் பார்வதியையும் வழிபடுகிறார்கள். 4 கால பூஜை, அபிஷேகங்கள், மற்றும் ஆன்மீக சொற்பொழிவுகள் நடைபெறும்.இந்த நாட்களில், விரதமிருந்து சிவபெருமானை வழிபடுவது மிகவும் புண்ணியமாகக் கருதப்படுகிறது.

# மார்கழி மாத அமாவாசை

மார்கழி மாத அமாவாசை (மார்கஷீஷ அமாவாசை) டிசம்பர் 19, 2025 புதன்கிழமை அன்று வருகிறது. இந்தத் திதி டிசம்பர் 19 காலை 9:13 மணிக்குத் தொடங்கி, டிசம்பர் 20, 2025 அன்று மதியம் 12:00 மணி வரை நீடிக்கிறது. இது அனுமன் ஜெயந்தி அனுஷ்டிக்கும் நாள், முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய ஏற்ற நாள்.மார்கழி அமாவாசை அன்று தான் அனுமன் அவதரித்தார், எனவே இது அனுமன் ஜெயந்தியாகவும் கொண்டாடப்படுகிறது.முன்னோர்களை நினைத்து தர்ப்பணம் செய்ய உகந்த நாள், இதனால் கிரகங்கள் துணை புரியும், நினைத்த காரியங்கள் கைகூடும் என்று நம்பப்படுகிறது.இந்த நாளில் முன்னோர்களுக்கு நீத்தார் கடன் செய்து, தான தர்மங்கள் செய்யலாம். மந்திரங்கள் சொல்வதன் மூலம் தடைகளை நீக்கி, நன்மைகளைப் பெறலாம்.

# எந்த திசையில் விளக்கேற்றினால் செல்வம் சேரும்



ஒளி தரும் திருவிளக்கில் துர்கா,லட்சுமி,சரஸ்வதி சூட்சுமமாக நிறைந்து இருப்பதால் தீபஒளி பார்க்கும் போது நமக்குள் அமைதி ஏற்படுகிறது.திருவிளக்கின் அடிப்பாகத்தில் பிரம்மா, தண்டு பாகத்தில் மஹாவிஷ்ணு, நெய், எண்ணெய் நிறையும் இடத்தில் சிவபெருமானும் வாசம் செய்கின்றனர். திருவிளக்கின் உச்சி, முகங்கள் ஐந்து, தீபஸ்தம்பம், தீப பாதம் ஆகிய எட்டு இடங்களில் சந்தனப் பொட்டும், அதன் மேல் குங்குமமும் வைக்க வேண்டும். இதனால், வீட்டில் ஐஸ்வர்யம் பெருகும். எட்டு பொட்டுகள் வைப்பதற்கு தத்துவார்த்த பொருள் உண்டு. நிலம், நீர்,காற்று, நெருப்பு, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்கள், சூரியன், சந்திரன் ஆகிய தெய்வங்கள், ஆத்மா என்னும் உயிர் தத்துவம் ஆகியவற்றின் குறியீடுகளாக இந்த பொட்டுகள் திகழ்கிறது.காலை ஆறு மணி வரையும், மாலை ஆறு மணி முதல் ஏழு மணி வரை தீபம் எற்றுவதற்கு உகந்த நேரம். அதிகாலை பிரம்ம முகூர்த்தமான நான்கு மணியள வில் தீப ஒளிஏற்றி வழிபட்டால் அனைத்து செயல்களும் நன்மை யைத் தரும், மற்றும் பெரும் புண்ணியம் உண்டாகும். முன் வினைப்பாவம் விலகும்.மாலையில் 4.306க்கு இடையே உள்ள பிரதோஷ வேளை சிவபெரு மானுக்கும், நரசிம்ம மூர்த்திக்கும் மிகவும் உகந்தவை. இந்த நேரத்தில் தீபமேற்றினால் திருமணத்தடை, கல்வித்தடை நீங்கி நமது வீட்டில் மகா லட்சுமி வாசம் செய்வாள்.வாஸ்து கிரக தோஷங்கள் நீங்கிட சுத்தமான பசு நெய்யினால் தீபம் ஏற்ற வேண்டும். கணவன் மனைவி உறவு நலம் பெறவும், மற்றவர்களின் உதவி பெறவும் வேப்பெண்ணை தீபம் உகந்தது.

**எந்த திசையில் தீபம் ஏற்றலாம்:**

தீபத்தில் கிழக்குத் திசையில் உள்ள முகத்தை மட்டுமே ஏற்றினால் நம்மைத் தொடரும் துன்பங்கள் நீங்கும். மேலும் பொதுவாழ்வில் நன்மதிப்பும் கிடைக்கும். மேற்குத் திசையில் உள்ள முகத்தை மட்டும் ஏற்றினால் சகோதரர்களிடையே ஒற்றுமை ஏற்படும்; கடன் தொல்லைகள் விலகும். பெரும் செல்வமும் வேண்டுவோர் வடதிசையில் உள்ள முகத்தை ஏற்ற வேண்டும்.

**எந்த திசையில் ஏற்றக் கூடாது:**

தென் திசையில் உள்ள முகத்தை ஒருபோதும் ஏற்றக் கூடாது. எதிர்பாராத தொல்லைகளும், கடன்களும் பாவங்களும் கூடும். இருளைப் பழித்துப் பேசுவதை விட அந்த இடத்தில் ஒரு அகல் விளக்கை ஏற்றி வை வெளிச்சம் ஒளி வீசும் என்பார்கள்.


# CLASSiFiEDS

**RENTAL**

IND.HOUSE FOR RENT- FIRST FLOOR @ PALLAVARAM CLOSE TO AIRPORT& RAILWAY STATION
3BHK AC,CP, CCTV-GARDEN ,TV NET
99405 07235

**NEW FLAT SALE**

NEW FLATS FOR SALE @CHROMPET
PATEL STREET- NEHRU NAGAR
NEARER TO RAILWAY STATIONS & BUS STOP
2 BHK WITH STUDY ROOM & CAR PARKING
VISHNOO BUILDERS
9884042383
9444042383
9962542382

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல் விளம்பரம் செய்ய 2 x 4cm Rs.525 /-(Colour) மட்டுமே
044 - 22236399 / 89395 26999

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.

GST ROAD NEWS FOR ADVERTISMENT DETAILS CONTACT
89395 26999 / 044-22236399

**FLAT RESALE**

FLATS FOR SALE @ CHROMPET
HASTHINAPURAM
2BHK-900 Sqft ,464UDS
44 LAKHS
FIRST FLOOR / CAR PARKING
99620 03409

FLAT FOR RESALES @CHROMPET
@ HASTINAPURAM
3BHK 1075 Sqft
5 YRS OLD, 1st FLOOR
LIFT, CCP
80722 30451

FLATS FOR SALE @ CHROMPET
1,2,3 BHK AVAILABLE
80722 30451

FLAT FOR RESALE @MARUTHI NAGAR
3 BHK - 1888 Sqft
UDS - 880 Sqft

IND HOUSE FOR SALE @ CHROMPET
NEMILICHERY
2BHK LAND AREA 575 SQFT
BUILT UP AREA-1640 SQFT CCP
80722 30451


# திருச்செந்தூர் முருகன் கோவில் மார்கழி மாத நடைதிறப்பு





மார்கழி மாதத் தை ஒட்டி திருச்செந்தூர் முருகன் கோவிலில் நடை திறப்பு நேரங்கள் மாற்றப் பட்டுள்ளன. வருகிற 16ம் தேதி முதல் ஜனவரி 14ம் தேதி வரை இந்த மாற்றங்கள் அமலில் இருக்கும். அதிகாலை 3 மணிக்கு நடை திறக்கும் மூன்று முப்பது மணிக்கு விஸ்வரூப தரிசனம், 4:00 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம், காலை ஏழு முப்பது மணிக்கு உச்சிக்கால அபிஷேகம், மாலை 6 மணிக்கு ராக்கால அபிஷேகம், 8 மணிக்கு நடை திருக்காப்பிடுதல். பக்தர்கள் இரவு 7 மணி வரை தான் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

# பெண்களுக்கான சில பூஜை அறையின் 10 குறிப்புகள்:



1. பூஜை அறையில் பஞ்சபாத்திர தண்ணீரை தினமும் மாற்றுவது நல்லது.

2. பூஜை செய்யும் போது தெய்வத்திற்கு வைக்கும் வெற்றிலை இரட்டை படையில் இருக்க வேண்டும். வெற்றிலையின் காம்பு பகுதி வலது புறமும், நுனிப் பகுதி இடது புறமும் இருக்க வேண்டும்.

3. பூஜைக்கு எந்த காரணத்தைக் கொண்டும் இரும்பினால் ஆன பொருட்களை பயன்படுத்தக் கூடாது. செம்பு, பித்தளை, வெள்ளி, மண்ணால் ஆனா பொருட்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

4. பூஜை அறையில் கண்டிப்பாக கண்ணாடி வைத்திருப்பது நல்லது. கண்ணாடியின் முன் ஒரு கிண்ணத்தில் சில்லறை காசுகளை வைத்து அந்த காசுகளின் பிம்பம் கண்ணாடியில் விழு மாறு வைக்க வேண்டும்.

5. பூஜை அறையில் வைக்கப்படும் காமாட்சி விளக்கினை வெறும் தரையில் வைக்க கூடாது. ஒரு தட்டில் அல்லது சிறிய முக்காலி ஒன்றில் வைத்து தான் விளக்கேற்ற வேண்டும்.

6. பூஜை அறையில் ஒரு சிறிய கிண்ணத்தில் ஏலக்காய், கிராம்பு, பட்டை, பச்சை கற்பூரம் போன்ற வாசனை பொருட்களை வைப்பது நல்லது. ஏன் என்றால் இவற்றில் மகா லட்சுமி வாசம் செய்வதாக ஐதீகம்.

7. அன்னபூரணி சிலை அனைவரின் வீட்டிலும் கட்டாயம் இருக்க வேண்டும். ஒரு தட்டில் கொஞ்சம் அரிசியை போட்டு அதில் அன்னபூரணி சிலையை வைத்து வழிபட வேண்டும்.

8. பூஜை அறையில் கோமாதா படம் அல்லது சிலை வைத்து வழிபட நல்ல பலன்கள் கிடைக்கும்.

9. பூஜை அறையில் போடப்படும் கோலம் அரிசி மாவினால் போடுவது நல்லது.

10. சுவாமிக்கு ஒரு நாள் சூட்டிய மலர்களை மறுநாள் வைத் திருக்க கூடாது. ஏன் என்றால் காய்ந்த மலர்களில் எதிர்மறை சக்தி வெளிப்படும். எனவே பூஜை அறையில் வைக்கும் பூக்களை தினமும் மாற்ற வேண்டும்.



குரோம்பேட்டையில் கடந்த 56 ஆண்டுகளாக Chromepet Cultural Academy, நாடகம், கர்நாடகஇசை, உபன்யாசம், நாம சங்கீர்த்தனம் என்று பல்வேறு கலைச்சேவை செய்துகொண்டு வருகிறது. Chromepet Cultural Academy செய்து வரும் கலைத்தொண்டை பாராட்டி அதன் தற்போதைய செயலாளர் நாகராஜன் " சிறந்த கலை நிகழ்ச்சி அமைப்பாளர்" என்ற விருதை அளித்து சென்னை Kartik Fine Arts நிறுவனம், நாரத கானசபாவில் கௌரவித்தது. இவ்விழாவில் பல பிரபல இசை மற்றும் நாடக பிரமுகர்கள் கலந்து கொண்டு நாகராஜனை பாராட்டினர்.

## மதுரை எய்ம்ஸ் பணிகள் 42 சதவீதம் நிறைவு: மத்திய அமைச்சர் தகவல்

நாடாளுமன்றத்தில் மதுரை எய்ம்ஸ் குறித்த திமுக மக்களவை உறுப்பினர் அருண் நேருவின் கேள்விக்கு, மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையின் கட்டுமானப்பணிகள் 42சதவீதம் நிறைவடைந்துள்ளதாகவும், மருத்துவமனையை கட்டி முடிப்பதற்காக அக்டோபர் 2026 இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணையமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

## மகளிர் உரிமைத் தொகை உயர்கிறது

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2ம் கட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின், மகளிர் உரிமைத் தொகை உயர்த்தப்படும் என்று தெரிவித்தார். அவர் 17 லட்சம் பெண்களுக்கு உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

## குரோம்பேட்டை ராதா நகர் சுரங்கப்பாதை - மீண்டும் போராட்டம்



குரோம்பேட்டை ராதாநகர் சுரங்கப்பாதையை விரைவில் திறந்து அரசு ஒப்புக்கொண்டபடி வசதிகளை ஏற்படுத்த கோரி கவன ஈர்ப்பு ஆர்பாட்டம் நடைபெற்றது. இதில் பல்வேறு நலச்சங்கங்களை சார்ந்த 150க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு கோரிக்கை முழக்கங்களை எழுப்பினர். **கோரிக்கைகள் வருமாறு:-1.** ராதாநகர் சுரங்கப்பாதையிலிருந்து ரயில்மேடைக்கு பொதுமக்கள் செல்வதற்கு மற்ற சுரங்கப்பாதைகளில் உள்ளது போல், திட்டத்தில் உள்ளபடி படிக்கட்டுக்கள் அமைக்க வேண்டும். சுரங்கப்பாதையின் கிழக்கு பகுதியிலிருந்து, ஸ்டேசன் சாலை நடைமேம்பாலம் வரை, ஒப்புக்கொண்டபடி அனுகுசாலை, எஸ்கலேட்டர் அமைக்க வேண்டும். 2.சுமார் 3 லட்சம் மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க, 2014ஆம் ஆண்டு திட்ட அறிக்கையின்படி, வைஷ்ணவா கல்லூரி ரயில்வே கேட்டில் அரசுபேருந்து சென்றுவரும் வகையில் இருவழி சுரங்கப்பாதை அமைக்கவேண்டும். 3.அஸ்தினாபுரம் பேருந்து நிலையத்தில் பயணிகள்/பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும். 4.அஸ்தினாபுரம் பகுதி மக்கள் சந்திக்கும், மின்வெட்டு, குறைந்த மின்னழுத்தம் போன்ற பிரச்சினைகளில் இருந்து பாதுகாக்க, அறிவிக்கப்பட்ட துணைமின் நிலையத்தை வேண்டும். 5. சாலைகளில் சுற்றி திரியும் மாடுகள், நாய்களை கட்டுப்படுத்த வேண்டும். 6. அனைத்து சாலைகளிலும் உள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்ற வேண்டும். 7.அனைத்து மழைநீர் கால்வாய்களிலும் உள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்றி முறையாக பராமரிக்க, வேண்டும். மேற்கண்ட தகவலை இணைப்பு மைய செயலாளர் முருகையன் தெரிவித்தார்.

## 100 நாள் வேலை திட்டம்பெயர் மாற்றம்

கிராமங்களின் நலன் கருதி ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை தரும் நோக்கத்துடன் துவங்கப்பட்ட மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டம் என்ற 100 நாள் வேலை திட்டத்தின் பெயரை மாற்ற மத்திய அமைச்சரவை ஒப்புதல்அளித்துள்ளது.பிரதமர் மோடி தலைமையில் நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில் இந்த பெயரை 'பூஜ்ய பாபு கிராமின் ரோஜ்கார் யோஜனா' என பெயர் மாற்றம் செய்ய முடிவு எடுக்கப்பட்டுள்ளதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி உள்ளது.

## உணவே மருந்து...



1. கறிவேப்பிலை செடிக்கு புளித்த மோரை நீருடன் கலந்து ஊற்றி வர செடி நன்கு துளிர்த்து வளரும்.2. அருகம்புல்லில் சாறு எடுத்து சப்பாத்தி மாவில் கலந்து ரொட்டி செய்து சாப்பிடுவது நல்லது. அந்தச் சாற்றில் தாது உப்புகளும்வைட்டமின்களும் அதிகம். 3. கர்ப்பமான பெண்களுக்கு வாந்தி, குமட்டலைத் தடுக்க பாலில் முட்டையின வெண்கருவையும், சிறிது சோடாவையும் கலந்து சாப்பிடவேண்டும். 4. பொரித்த உணவுப் பண்டங்களை வைக்கும் பாத்திரத்தின் அடியில் ஒரு ரொட்டித் துண்டைப் போட்டு வைத்தால் உணவுப் பண்டங்கள் நமர்த்து போகாமல் இருக்கும். 5. மகிழம் பூவை நிழலில் உலர்த்தி சந்தனம் சமமாகச் சேர்த்து இடித்து பூசி குளித்தால் சூடு தணியும் சரண சக்தி பெருகும் உடல் பலப்படும் உடல் வலி நீங்கும் புண்கள் குணமாகும். 6. ஆறிய வெந்நீரில் விபூதியை குழைத்து நெற்றி, மூக்கின் மேல பூசிக்கொண்டால் ஜலதோஷம், தும்மல் ஒரளவில் குணமாகும். 7. ஒரு கொத்து கறிவேப்பிலையை உருவி வெது வெதுப்பான நீரில் போட்டு வைத்து பின் அத்தண்ணீரால் வீட்டைத் துடைத்தால் ஈ, எறும்பு அண்டாது. 8. செம்பருத்தி இலையை உலர வைத்து மிக்சியில் பொடியாக்கி வைத்துக் கொண்டு வாரம் மூன்று முறை இப்பொடியைத் தேய்த்துக் குளித்து வந்தால் முடி கருகருவென வளரும். 9. புதினா இலையை சாறு எடுத்து குளிக்கும் முன் அரை மணி முகத்தில் தேய்த்து ஊறிய பின் குளித்தால் முகத்தில் சுருக்கம் வராது. 10. இரவு நேர விளக்கு நீல நிறமாக இருந்தால் இரத்த சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். நரம்புகளிக்கும் அமைதியும் சக்தியும் கிடைக்கும். எனவே படுக்கையறையில் நீல நிற விளக்கைப் பயன்படுத்தலாம்.

## பச்சை பட்டாணி புலாவ்



**தேவையான பொருட்கள்:** பாஸ்மதி ரைஸ் 1/2 கிலோ, வெங்காயம் 1, தக்காளி 4, இஞ்சி, பூண்டு பேஸ்ட் 1 டீஸ்பூன், பச்சை மிளகாய் 4, பட்டாணி ஒரு கைப்பிடி, வெந்தயக்கீரை ஒரு கப், தேங்காய் பால் 1கப், நெய் 1டீஸ்பூன், சமையல் எண்ணெய் 1 டீஸ்பூன், உப்பு தேவையான அளவு.

**தாளிக்க:** பட்டை 2, கிராம்பு 4, சோம்பு 1/2 டீஸ்பூன், ஏலக்காய் 2, அன்னாசி பூ 1, பிரியாணி இலை 3.

**செய்முறை:** வெங்காயம், தக்காளி, வெந்தயக்கீரையை பொடியாக நறுக்கி கொள்ளவும். ஒரு குக்கரை அடுப்பில் வைத்து சூடேறியதும் அதில் நெய் மற்றும் எண்ணெய் விட்டு சூடானதும் தாளிக்க கொடுக்கப்பட்டுள்ள பொருட்களை போட்டு தாளித்த பின்னர் வெங்காயம், பச்சை மிளகாய் சேர்த்து வதக்க வேண்டும். வெங்காயம் வதங்கியதும் அதில் இஞ்சி பூண்டு விழுது சேர்த்து பச்சை வாசனை போகும் வரை வதக்க வேண்டும். அதில் பட்டாணியையும் சேர்த்து வதக்க வேண்டும். பச்சை பட்டாணியாக இருந்தால் புலாவ் செய்வதற்கு ஒரு மணிநேரம் முன்பு நன்கு கழுவி சுத்தம் செய்து சுடுதண்ணீரில் ஊறவைத்தால் போதுமானது. பின்னர் சுத்தம் செய்து வைத்துள்ள வெந்தயக்கீரையை முழுதாக அப்படியே சேர்க்க வேண்டும். கீரை வதங்கியதும் நறுக்கி வைத்துள்ள தக்காளி சேர்த்து, லேசாக உப்பு போட்டு வதக்க வேண்டும். இவைகள் அனைத்தும் நன்கு சுருள வதங்கி வந்ததும், பாஸ்மதி ரைஸ் சேர்த்து கிளறி விட வேண்டும். பின்னர் தேங்காய் பால் சேர்த்துகொள்ள வேண்டும். ஒரு பங்கு அரிசிக்கு, இரண்டு பங்கு தண்ணீர் ஊற்றவேண்டும். இதில் தேங்காய் பால் சேர்த்து உள்ளதால், ஒன்னே முக்கால் பங்கு தண்ணீர் சேர்த்தால் போதும். உப்பு சரி பார்த்து விட்டு குக்கரை மூடிவைத்து இரண்டே விசில் விட்டால்போதும், அற்புதமான வாசனையில், ஆரோக்கியமான பச்சை பட்டாணி புலாவ் ரெடி.

## உடல் எடை குறைப்புக்கு காய்கறி ஜூஸ்



இணையத்தின் தரவுகளை சற்று அலசிப்பார்த்தால், அதில் மக்கள் அதிகமாகத் தேடுவது உடல் எடை சார்ந்த விஷயங்கள்தான். ஏனென்றால், தற்போதைய நவீன உலகில் மோசமான உணவுப் பழக்கங்களால் உடல் எடை வேகமாகக் கூடிவிடுகிறது. உடல் எடை கூடிய பிறகுதான் அதைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணமே மக்களுக்கு வருகிறது. அதற்காக காய்கறி ஜூஸ் குடிப்பது பிரதானமாகக் கடைபிடிக்கப்படுகிறது. ஆனால், உண்மையிலேயே காய்கறி ஜூஸ் குடிப்பது உடல் எடை குறைப்புக்கு உதவுமா? என்ற கேள்வி பலரது மத்தியிலும் இருந்து வருகிறது. உடல் எடையைக் குறைக்க வேண்டும் என்றாலே அதற்கு முதலாவதாகச் சொல்லப்படுவது காய்கறிகளை அதிகம் சாப்பிடுங்கள் மற்றும் காய்கறி ஜூஸ் குடியுங்கள் என்பதுதான்.நெல்லிக்காய், வாழைத்தண்டு, வெள்ளை பூசணி ஜூஸ் குடிக்க ஏற்றவை. இவற்றை தினசரி குடிக்காமல் ஒரு நாள் விட்டு ஒரு நாள் எடுத்துக்கொள்வது நல்லது. இதிலும் குறிப்பாக, வாழைத்தண்டு ஜூஸ் உடல் எடை குறைப்புக்கு மிகவும் நல்லதாகும். வாழைத்தண்டை முதலில் பொடியாக நறுக்கி அதில் கொஞ்சம் தண்ணீர் சேர்த்து மிக்ஸியில் அரைத்து வடிகட்டி குடிக்கலாம். அரைத்த இந்த ஜூஸில் சிறிதளவு மிளகுத்தூள், உப்பு, சீரகம் சேர்த்து குடித்தால் உடலுக்கு நல்லது. அதேபோல, வெள்ளை பூசணி ஜூஸும் உடல் எடை குறைப்புக்கு உகந்ததாகும். இவற்றை தினசரி காலையில் வெறும் வயிற்றில் குடிப்பது நல்லது. இதைக் குடித்த அடுத்த ஒரு மணி நேரத்துக்கு வேறு எந்த உணவும் எடுத்துக்கொள்ளக் கூடாது.அடுத்ததாக, புதினா, கொத்தமல்லி, நெல்லிக்காய் சேர்த்து அரைத்த ஜூஸ் உடல் ஆரோக்கியத்துக்கு நல்லது. இதனால் உடலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை எனில் தொடர்ந்து அந்தக் காய்கறி ஜூஸை எடுத்துக்கொள்ளலாம்.உடல் எடை குறைப்புக்கு உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி மற்றும் வாழ்க்கை முறையில் சில மாற்றங்களையும் பின்பற்றினால் மட்டுமே வெற்றி கிடைக்கும்.

## தமிழகத்தில் 77 லட்சம் வாக்காளர் நீக்கம்

தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை கூறிய தாவது: எஸ்ஐஆர் பணி மூலம் தமிழகத்தில் 80 லட்சம் பேர் வரை நீக்கப்பட வேண்டும் என்று பாஜக தெரிவித்திருந்தது. தற்போது 77 லட்சம் பேர் நீக்கப்பட்டுள்ளனர். அதாவது 12.5 சதவீதம் வாக்காளர்கள் வெவ்வேறு காரணங்களுக்காக பட்டியலில் இருந்து நீக்கப் பட்டுள்ளனர். 2026 தேர்தலை நியாயமாக நடத்த வேண்டும் என்பதே எங்கள் நோக்கமாகும். இவ்வாறு அண்ணாமலை கூறினார்.

KAMU'S AUTHENTIC BRAHMIN KITCHEN PROVIDES
"SAMBAR, RASAM, KOOTU , PORIYAL" FOR LUNCH& S&N INDIAN DELICACY DINNER ITEMS
ON DOOR DELIVERY / DIRECT Collection at Purushotham Nagar, Chromepet on daily/ Monthly basis.
(Small and Bulk orders are welcome)
99404 14187

VISHNUSRI HOMES
Ind. House Plan
Flat Renovation
Expansion
Modular Kitchen
Sump & Compound Wall
88257 88408 / 73972 32365

PART TIME JOB @ CHROMPET SNACKS SHOP
EVENING 4.30PM TO 8.30PM
MONTHLY SALARY - 5000
LADIES ONLY
90434 86509
93614 83689

WANTED
குரோம்பேட்டை பஸ் ஸ்டாப் அருகில் உள்ள பிளாஸ்டிக் கம்பெனிக்கு படித்த / படிக்காத பெண்கள் / ஆண்கள் / பையன்கள் வேலைக்கு தேவை Part time
S.S.Raj, Dalee Plastics
208, Gst Road, Near Poorvika Cellshop, Chromepet
72996 30890 / 99401 67165

KR CONSTRUCTIONS
ENGINEER & CONTRACTOR
CONSTRUCTION
ARCHITECTURAL PLANS
APPROVALS
RENOVATION
LABOUR CONTRACT
80724 99969

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு Retd, SENIOR CITIZEN, LADIES தேவை
AGE - 45 TO 75, SSLC AND ABOVE
Work From Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949

## பீட்ரூட் தரும் அற்புத சருமப் பொலிவு நன்மைகள்



பீட்ரூட்டில் உள்ள லிகோபேன் மற்றும் ஸ்காலீன் சருமம் தொங்கிப் போவதை தடுத்து இளமையான தோற்றத்தை தரக்கூடியது. பீட்ரூட்டில் உள்ள விட்டமின் சி யானது சருமத்திற்கு நல்ல நிறத்தை கொடுக்கக் கூடியது. இதில் ஆக்ஸிஜனேற்ற பண்புள்ளது. விட்டமின் ஏ, சி மற்றும் விட்டமின் கே உள்ளது.பெண்கள் எப்போதும் முகத்தை பொலிவாக வைத்துக் கொள்ள விரும்புவார்கள். பீட்ரூட் இயற்கையாகவே முகத்தை பளபளக்க வைக்கும். பக்க விளைவே இல்லாததும், சரும பொலிவுக்கு ஏற்றதுமான பீட்ரூட் இயற்கை கொடுத்த நன்கொடையில் சிறந்த ஒன்று. பீட்ரூட்டில் பல வகையான விட்டமின்கள் உள்ளது. சோடியம், பொட்டாசியம், கால்சியம், பாஸ்பரஸ் போன்ற சத்துக்களும் நிறைந்துள்ளது. சரும ஆரோக்கியத்திற்கு மிகவும் ஏற்றது. முகப்பருக்களை சுற்றி ஏற்படும் புண்களையும், நோய் தொற்றையும் குணப்படுத்தும் தன்மை கொண்டது. முகத்தின் துளைகளில் உள்ள அதிக எண்ணெய் பசையை நீக்கும் தன்மை கொண்டது பீட்ரூட் சாறு. நான்கு ஸ்பூன் பீட்ரூட் சாறுடன் ஒரு ஸ்பூன் தேன் கலந்து முகத்தில் தடவி 20 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரால் கழுவி விட முகம் பளபளப்பாகும்.முகப்பரு, பிளாக் ஹெட்ஸ் ஆகியவற்றிற்கு சிறிதளவு பீட்ரூட் சாறுடன் தக்காளி சாறு கலந்து முகத்தில் பூசி 20 நிமிடங்கள் கழித்து தண்ணீர் விட்டு முகம் கழுவ முகப்பரு, பிளாக் ஹெட்ஸ் ஆகியவை நீங்கும். பீட்ரூட்சாறுடன் சிறிது தயிர் கலந்து அதனை முகம் கழுத்துப் பகுதிகளில் தடவி 20 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரால் கழுவி விட வறண்ட சருமம் மென்மையாக மாறிவிடும். இதில் ப்ளீச்சிங் தன்மை உள்ளதால் முகம் பளபளப்பாகும். முகத்தில் உள்ள சுருக்கங்கள், கண்களைச் சுற்றி உள்ள கருவளையங்கள் ஆகியவை போக வாரத்திற்கு மூன்று முறை பீட்ரூட் சாறுடன் சிறிது தேன், சிறிது பால் கலந்து குழைத்து முகத்தில் பூசி 15 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரால் கழுவி வர சருமம்தொங்கிப்போவதை தடுத்து இளமையான தோற்றம் பெற்று தரும். பீட்ரூட் சாறு, 2 ஸ்பூன் கற்றாழை ஜெல்லுடன் கலந்து முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தடவி 20 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரால் கழுவி விட பளபளப்பான தோற்றம் கிடைக்கும். பீட்ரூட் சாறுடன் ஒரு மூடி எலுமிச்சம் பழச்சாறு கலந்து முகம், முன் கழுத்து, பின்கழுத்து பகுதி களில் தடவி 20 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரால் கழுவமுகத்தில் உள்ள கரும் புள்ளிகளை போக்கும். பளிச் சென்ற தோற்றம் கிடைக்கப் பெறும். பீட்ரூட் பயன்படுத்தி முகத்தில் உள்ள தழும்புகள், கரும் புள்ளிகள் மற்றும் சருமத் துளைகளை சரி செய்யலாம். தோலுக்கு இளம் சிவப்பு நிறத்தையும் அளிக்கக் கூடியது இந்த பீட்ரூட். நம் சருமத்தில் உள்ள துளைகளை திறக்க உதவுகிறது. சிலருக்கு உதடுகள் வெடித்து அல்லது காய்ந்து போகும். இதற்கு பீட்ரூட் சாறை தடவி வர நல்ல பலன் கிடைக்கும். உதட்டின் கருமை நீங்கி உதடு சிகப்பாவத்துடன் வறண்டு போகாமலும், ஈரப்பதத்துடனும் இருக்கும்.உடம்பில் ஏற்படும் அரிப்பு, எரிச்சல் போன்ற பிரச்சனை களுக்கு பீட்ரூட் சாறுடன் ஒரு பங்கு நீர் கலந்து தடவி 15 நிமிடங்கள் கழித்து அப்பகுதியை கழுவிவிட அரிப்பு, எரிச்சல் ஆகியவை குணமாகும்.



குரோம்பேட்டை பத்மநாபநகர் ஸ்ரீகருமாரியம்மன் ஆலயத்தில் ஸ்ரீ ஐயப்பசுவாமி 50ம் ஆண்டு விளக்கு பூஜை வெகுவிமர்சையாக நடைபெற்றது. காலையில் மகாகணபதி ஹோமமும் மற்றும் சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் சகஸ்ரநாம அர்ச்சனை மகாதீபாதாரனை முடிந்து மதியம் 12.45 மணி அளவில் அன்னதானம் வழங்கப்பட்டது. அன்னதானத்தை செம்பாக்கம் வடக்கு பகுதி திமுக செயலாளர் ஏ.கே.கருணாகரன் துவக்கிவைத்தார். இந்நிகழ்வில் அஸ்தினாபுரம் மதுரைவீரன் கலந்து கொண்டார். மாலை 7மணி அளவில் அஸ்தினாபுரம் ஸ்ரீ சதுர் குண்டு விநாயகர் ஆலயத்தில் இருந்து ஸ்ரீ ஐயப்பசுவாமி பஞ்ச வாத்தியங்களுடன் திருவீதி உலா சிறப்பாக நடந்தது, நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் விளக்கு ஏந்தி வந்தனர். இரவு 9 மணி அளவில் சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, க.ரமேஷ், சங்கர் கன்ஸ்ட்ரக்சன் உரிமையாளர் கே.ஹெச்.சங்கரநாராயணன் அவரது துணைவியார் நித்யா சங்கரநாராயணன் கலந்துகொண்டனர். இவர்களுக்கு ஸ்ரீ கருமாரியம்மன் பக்த ஜனசபை நிர்வாகிகள் சால்வை மாலை அணிவித்து பிரசாதங்களை வழங்கி கௌரவப்படுத்தினர். விழா ஏற்பாடுகளை ஆலய நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.



தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 30 வது வார்டு துர்கா நகரில் புதிய அங்கன்வாடி மையத்தை தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் திறந்து வைத்த போது எடுத்த படம். அருகில் திருநீர்மலை பகுதி செயலாளர் த.ஜெயக்குமார் மற்றும், மாநகராட்சி அதிகாரிகள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## மார்கழி இசை விழா

குரோம்பேட்டை கல்ச்சுரல் அகாடமி சார்பில் 57வது வருடாந்திர மார்கழி இசை விழா 25ம் தேதி தொடங்குகிறது. தினசரி மாலை 6:00மணி அளவில் இசை கச்சேரிகள் நடைபெறுகின்றன.25ம் தேதி – கிரண், நிவி. 26ம் தேதி– ஐஸ்வர்யா, எஸ்.சௌந்தர்யா. 27ம்தேதி–சக்திதர்மன். 28ம் தேதி–நிஷாராஜகோபாலன் குழுவினரின் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

## சவுக்கு சங்கர் கைது



யூடியூபர் சவுக்கு சங்கரை போலீசார் கைது செய்துள்ளனர். பட தயாரிப்பாளரை மிரட்டியதாக பதியப்பட்ட வழக்கில் சவுக்கு சங்கரை போலீசார் கைது செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆதம்பாக்கத்தில் உள்ள சவுக்கு சங்கரின் வீட்டிற்கு சென்ற போலீசார் அவரை வீட்டில் வைத்தே கைது செய்துள்ளனர். சவுக்கு சங்கருடன் சேர்த்து அவரது யூடியூப் சேனலில் பணியாற்றும் மேலும் 5 பேரையும் போலீசார் கைது செய்துள்ளனர்.

அதே வேளை, சென்னை மாநகர ஆணையர் அருண், பினாமி மூலம் சொத்துகள் வாங்கி பல கோடி ரூபாய் முதலீடுகள் செய்துள்ள விவரங்களை நேற்று வெளியிட்டதாலேயே இன்று கைது செய்யப்பட்டுள்ளதாக சவுக்கு சங்கர் தெரிவித்துள்ளார். இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மெஸ்ஸி நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் கைது

கொல்கத்தா மைதானத்தில் மெஸ்ஸி பங்கேற்ற விழாவை ஏற்பாடு செய்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் Satadru Dutta கைது. மெஸ்ஸியை சரியாக காண முடியாத ஆத்திரத்தில், ரசிகர்கள் இருக்கைகளை பிடுங்கி மைதானத்தில் தூக்கி வீசி ரகளையில் ஈடுபட்டதையடுத்து காவல்துறை நடவடிக்கை.




குரோம்பேட்டை அரிமா சங்கம் வட்டாரத் தலைவர் லயன் எம். ஜெயபாலுக்கு அரிமா ஆளுநர் மணிசேகர் பண்ணாட்டு அரிமா இயக்கத்தில் இருந்து வழங்கப்பட்ட பட்டயத்தை வழங்கிய போது எடுத்தபடம். உடன் இரண்டாம் நிலை துணை ஆளுநர் ஜெயக்கொடி, கே.எம்.ஜே.அசோக் உள்ளனர்.



ஹில்டன் பள்ளியின் மேலாண்மை, முதல்வர், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்கள் சார்பாக, மண்டல மற்றும் மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து 73 பதக்கங்களை வென்று, மாநில அளவிற்கு தகுதி பெற்ற எங்கள் மாணவர்களை மனமார்ந்த வாழ்த்துகளுடன் பாராட்டுகிறோம்.ஹில்டேனியன் மூலம் அலங்கரிக்கப்பட்ட இவ்வெற்றி, எங்கள் பள்ளிக்கு பெருமை சேர்த்து, அனைவரையும் மகிழ்ச்சியடையச் செய்துள்ளது.


SAI AJAY MAHAL A/C
ARUL MURUGAN THUNAI
www.saiajaymahal.com
Chrompet Lalitha Jewellery Backside
FULLY AIR CONDITION • UNDERGROUND 18 CAR PARKING • GROUND FLOOR - 150 MEMBERS DINING
1 ST FLOOR - 450 MEMBERS FUNCTION HALL • Floating 900 Members - SUPER DELUXE 15 ROOMS
முகூர்த்தம் Dates Available
Jan - 28 Feb - 06,,08, 13, 15,16,20
Mar - 05, 06,08, 15, 16,25
ONE DAY PACKAGE Rs. 1.99 L
(All Inclusive with: Free EB, Wallet Parking, 6 Rooms)
IDEAL FOR ✦ ENGAGEMENT ✦ RECEPTION ✦ WEDDING ✦ SEEMANTHAM ✦ AYUSH HOMAM ✦ UPANAYANAM ✦ BIRTHDAY ✦ PUBERTY ✦ 25TH ANNIVERSARY ✦ 60TH WEDDING ✦ 80TH WEDDING ✦ BANQUETS HALL
No.22/6A, Baskar Tower, 1st Main Road, New Colony, Chrompet, CH-44.
98401 86682 / 98400 14910 / 94444 22979





வாழ்க தமிழ் ! வளர்க சமூக சேவை !
சமூக ஆர்வலர், நீர்நிலை பாதுகாவலர்,
போதை ஒழிப்பு குரல் கொடுத்துவரும்
அரசியல் பாகுபாடின்றி தனது அன்பர்களை
அரவணைத்து மதித்து அனைவரையும்
சமூக ஆர்வலராக, தேசபற்றுடையவர்களாக உருவாக்கியவர்!
"சேவா ரத்னா"
டாக்டர். V. சந்தானம் அவர்களின்
பிறந்தநாளில் அவரை வணங்கி பாராட்டி மகிழும்
தியாகி நெல்லையப்பர், சிலம்பு செல்வர்
டாக்டர். மா.பொ.சி தமிழ்பேரவை
குரோம்பேட்டை (குமரன் குன்றம்)
தலைவர் : குட்டி (எ) B. தேவராஜன்
துணைத்தலைவர் : P. இராமகிருஷ்ணன்
செயலாளர் : பிரஸ் P. பழனி
பொருளாளர் : S. மீனாட்சிசுந்தரம்
மற்றும் நிர்வாகிகள்




## சென்னை குடிநீர்ஏரிகள் மூன்றும் நிரம்பின

தொடர்நீர் வரத்தால்,27 ஆண்டுகளுக்கு பிறகு ஒரே நேரத்தில் பூண்டி, புழல் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகள் முழுமையாக நிரம்பின. 'டிட்வா' புயல் காரணமாக திருவள்ளூர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த மழை, கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு நின்றது. இருந்தாலும் தண்ணீர் தொடர்ந்து வந்ததால் ஏரிகள் நிரம்பிவிட்டன.எனவே இந்த ஆண்டு கோடையில் தண்ணீர் தட்டுப்பாடு வராது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.


FLATS FOR SALE @ CHROMPET
NR.R.P. ROAD VIVEKANANDHA NSN SCHOOLS
HAND OVER JAN-26
AVAILABLE 2BHK 901-921 Sqft
AMENITIES
With Lift
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Ev Charger Point
AUTOMATIC WATER TANK LEVELLER
Red Bricks Construction
INDIVIDUAL WATER TANK
ANUJ HOMES 81481 11101,94446 54776






ஸ்ரீ ராம ஜெயம்
அருள்மிகு ஸ்ரீ பிரசன்ன யோக ஆஞ்சநேயர் பெருமாள் திருக்கோவில்
அனுமார் கோயில் தெரு, நேரு நகர், குரோம்பேட்டை, சென்னை – 600 044.
திருப்பணி வேண்டுகோள்
கடந்த ஏப்ரல் [21.04.2024] முதல் கட்டுமான திருப்பணிகள் நடைபெற்று வருகிறது.
அருள்மிகு ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாள் அருள்மிகு அலர்மேலு மங்கை தாயார் அருள்மிகு ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் அருள்மிகு ராமானுஜர் அருள்மிகு லட்சுமி ஹயகிரிவர் அருள்மிகு ஆஞ்சநேய சுவாமி ஆலயத்தில் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.திருப்பணி முடியும் தருவாயில் உள்ளதால் மேலும் இத்திருப்பணிகள் பூர்த்தி செய்வதற்கும் மிக விரைவில் கும்பாபிஷேகம் செய்வதற்கும் நன்கொடை கட்டுமான பொருட்கள் வழங்க விருப்பமுள்ளவர்கள் திருக்கோயில் பரம்பரை அறங்காவலரை தொடர்புகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.





இங்ஙனம்
G. தேவராஜன், பரம்பரை அறங்காவலர், செல் : 72999 37100



Newly Opened
SRI SASTHA MAHAL A/C
The Group of Sankar Constructions
Bookings Open
Fully Airconditioned Thirumana Maaligai
In Hasthinapuram, RP Road
Main Hall capacity of 500 persons (Floating 1000 Persons)
Dining hall capacity of 200 persons
14 A/C Rooms
Modular Kitchen with store room and service lift for dining
Passenger Lift capacity of 16 members
CCTV Camera for whole building
Vinayagar temple is within the premises
The hall is fully equipped with stand by Generator
Pooja items and Unjal available
Ample car parking available for both four wheelers and two wheelers
Valet Car Parking Available
No.32, Hariharan Towers, R.P.Road, Hasthinapuram, Chrompet - 44.
98416 59929 / 98416 59931 / 90030 10611




Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725